பக்கங்கள் 23+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 20 வியாழக்கிழமை 04.09.2025 | அதிர்வு 36

## பகிடிவதை குற்றச்சாட்டில் கிழக்குப் பல்கலை மாணவிகள் உள்ளிட்ட 15 மாணவர்கள் கைது!

கிழக்குப் பல்கலைக்கழகத் தொழில்நுட்பப் பீடத்தில் பயிலும் மாணவிகள் குழுவைப் பகிடிவதை செய்த

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்

# யாழ். இந்து மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்



(எஸ்.நிதர்ஷன்)

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை முன்னிலை பெற்றுள்ளது.

அந்த வகையில், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் ஆனந்தசோதி லக்சயன் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலமாக முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மாணவன் ஆனந்தசோதி லக்சயன் 194 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும், யாழ்ப் பாணம் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார் என்று பாடசாலை அதிபர் லதாநந்தினி சிவபாதம் தெரிவித்தார்.

03▶

# சி.ஐ.டி. வசமாகும் மஹிந்தவின் வீடு



## அரசு அதிரடி நடவடிக்கை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தங்கியுள்ள கொழும்பு, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச வாசஸ்தலத்தை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

அரச உயர் அதிகாரிகளால் இது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்காக அரசால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தை அமுல்படுத்த அரசு எதிர்பார்த்துள்ளது.

இந்தச் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு எதிர்வரும் காலங்களில் சபாநாயகரிடம் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



# வடக்கு ஆளுநரைச் சந்தித்த வடக்கு கடற்படைத் தளபதி

வடக்கு மாகாணக் கடற்படைத் தளபதியாகப் புதிதாகப் பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் புடிக்ஹ லியன கமகே, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இன்று வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.





# பெக்கோ சமனின் மனைவிக்கு செப். 18 வரை விளக்கமறியல்!



இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “பெக்கோ சமன்” என்பவரின் மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கெஹெல்பத்தர பத்மே“, “கொமாண்டோ சலிந்த“ , “பாணந்துறை நிலங்க“ மற்றும் “பெக்கோ சமனின்” மனைவி உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் கடந்த மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பாதாள உலகக் கும்பலில் இருந்த “பெக்கோ சமன்” என்பவரின் மனைவி கடந்த 29 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இதனையடுத்து “கெஹெல்பத்தர பத்மே” உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட பாதாள உலகக் கும்பல் கடந்த மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்ட பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “பெக்கோ சமன்” என்பவரின் மனைவி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**கிழக்கு பல்கலைக்கழக...**

6 மாணவிகள் மற்றும் 9 மாணவர்களைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அதே பல்கலைக்கழகத்தில் படிக்கும் 24 முதல் 26 வயதுக்குட்பட்ட மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பயிலும் மாணவிகள் குழுவை இந்த மாணவர்கள் பகிடிவதை செய்தனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பகிடிவதை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பேரில் நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**யாழ். இந்து மாணவன்...**

எதிர்காலத்தில் சிறந்த வைத்தியராக வருவதே தனது இலக்கு எனவும், தான் இந்தப் பெறுபேறுகளைப் பெற்கொள்வதற்கு தன்னை வழிப் படுத்திய பெற்றோர், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு மாணவன் நன்றிகளைத் தெரிவித்தார்.











# வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் 76 மாணவர்கள் சித்தி




**(கி.வசந்தன்)**

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் 76 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலான பெறுபேற்றைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு இம்முறை 154 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 76 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். அதேவேளை, 149 மாணவர்கள் 70 இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் 75 மாணவர்கள் சித்தி

**(கி.வசந்தன்)**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 75 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேற்றைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு இம்முறை 165 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 75 மாணவர்கள் வெட்டுப் புள்ளகளுக்கு மேல் பெற்றுள்ளதுடன், 159 மாணவர்கள் 70 இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மோடி சகாப்தம்

தன்னுடைய பொருளாதார மேலாதிக்க நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி இந்தியாவை அடக்கி ஒடுக்குவதற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எடுத்த முயற்சி இப்போது அமெரிக்கப் பொருளாதாரத்துக்கே - அதன் அடி நாதமாக விளங்கும் சர்வதேச வர்த்தகத்துக்கான டொலர் பாவனைக்கே - எதிரான சர்வதேச யுத்தமாக மாறி இருக்கின்றது.

சத்தம் சந்தடியின்றி அமெரிக்காவுக்கு எதிரான பொருளாதார யுத்த நடவடிக்கையைத் துணிச்சலுடன் நகர்த்தத் தொடங்கி இருக்கிறார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

முதல் கட்டமாக இந்தியா தனது அயல் தேசமான சீனாவுடனும் ரஷ்யாவுடனும் மிகப் பெரிய பொருளாதார ஒத்துழைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தொடங்கி இருக்கின்றது.

உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட சீனாவும், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறிவரும் இந்தியாவும், அடுத்த பெரிய பொருளாதார நிலையில் இருக்கும் ரஷ்யாவும், அவற்றுடன் சேர்ந்த மற்றைய பெரிய நாடுகளும் தங்களுக்கு இடையேயான பொருளாதார நடவடிக்கைகளை டொலரைத் தவிர்த்து ரூபாவில் அல்லது யுவானில் அல்லது ரூபிளில் அல்லது அதுபோன்ற பிறிதொரு பொதுக் கரன்ஸிசியில் மேற்கொள்ளும் தீர்மானத்திற்குப் பெரும்பாலும் வந்து விட்டன.

இதுவரை காலமும் சர்வதேச வர்த்தகத்தில் எண்பது வீதம் அமெரிக்க டொலரிலேயே முன்னெடுக்கப்பட்டு வந்தமையால், அந்த வர்த்தகத்தில் முடிசூடா மன்னனாக அரசோச்சி வந்த அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்திற்கு அதிரடி கொடுக்கும் நடவடிக்கையாக இந்த விவகாரம் விருத்தி அடைந்து வருகிறது.

தன்னுடைய வர்த்தக சாம்ராஜ்யத்துக்கு எதிராக - டொலர் மூலமான சர்வதேச வர்த்தகத்துக்கு மாறாக - நடவடிக்கை எடுக்கும் நாடுகளுக்கு எல்லாம் பல்வேறு வழிகளிலும் யுத்தப் பிரகடனம் செய்து நெருக்கடி கொடுத்து வந்த அமெரிக்கா, இப்போது இந்தியாவோடு முரண்பட்ட நிலையில், இந்தியப் பின்னணியில் முக்கிய நாடுகள் அமெரிக்காவுக்கு எதிராக அணி சேரும் வாய்ப்பை உருவாக்கி, அதன் மூலம் தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டு இருக்கின்றது.

மொஸ்கோவுடன் மிகப் பெரிய பாதுகாப்பு, வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைக் கடந்த மாதம் இந்தியா செய்திருக்கின்றது. அதன் படி மசகு எண்ணெய், பிற எரிபொருள்கள், பாதுகாப்பு விடயங்கள், உணவு, விவசாயம், வங்கி நடவடிக்கைகள், விஞ்ஞான செயற்பாடுகள், கலாசார நிகழ்வுகள் சார்ந்த - இரு நாடுகளுக்கும் இடையிலான - எந்த வர்த்தகத்திற்கும் இனிமேல் டொலர் பயன்படுத்தப்பட மாட்டாது. மாறாக ரூபா அல்லது ரூபிள் அல்லது அது போன்ற பிற நாணயம் ஒன்றே பயன்படுத்தப்படும்.

அமெரிக்க டொலரைத் தவிர்ப்பதன் மூலம் அதன் பொருளாதாரத்துக்கு அடி கொடுக்கும் இந்தியாவின் நகர்வு ஆரம்பத்தில் சத்தம் சந்தடியின்றி முன்னெடுக்கப் பட்டாலும், இந்தியா மீதான அமெரிக்க அழுத்தம் வெளிப்படையாகவும் மோசமாகவும் எதேச்சாதிகாரமாகவும் வெளிப்படுத்தப்பட்ட பின்னணியில், இந்திய நகர்வும் இப்போது வெளிப்படையாக முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை வெறுமனே வர்த்தக நகர்வு மட்டும் அல்ல. அதையும் தாண்டி அமெரிக்க வர்த்தக சாம்ராஜ்ய மேலாதிக்கத்துக்கு எதிரான தந்திரோபாய வர்த்தகத் தாக்குதலாகும். முனைப்பு மிக்க தாக்குதலாகும்.


உலகின் வர்த்தகத்தில் எண்பது வீதத்திற்கும் மேலான விடயங்கள் டொலரில் கையாளப்படும் நிலையில் பல தசாப்தங்களாக அந்த வர்த்தக மேலாதிக்கத்தை அமெரிக்கா கொண்டிருந்தது. அதை வைத்துக்கொண்டு மற்றைய நாடுகளின் சுயாதிபத்தியத்தை - இறையாண்மையை - மதிக்கத் தவறி அடக்குமுறை நடவடிக்கைகளை அந்த நாடு கட்டவிழ்த்து விட்டது. அதனை தற்போதைய அதன் தலைவர் அதிபர் டிரம்ப் உச்சகட்டமாக - மிக மோசமாக - பிற நாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ள நிலையில், உலகம் அமெரிக்காவுக்கு எதிராக ஒன்றுபட்டு, அதனை எதிர்கொள்ளத் தயாராகி இருக்கின்றது.

அந்தத் துணிச்சலான நடவடிக்கைக்கு இந்தியா முன்னணியில் நின்று உயிர்ப்புக் கொடுத்து தன்னுடைய தேசத்தின் இறையாண்மையின் தனித்துவத்தையும் பிற நாடுகளின் மதிப்பையும் தக்க வைக்கக் காத்திரமான நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அந்த வகையில் இந்திய தலைவர் நரேந்திர மோடி இந்த சகாப்தத்தின் முக்கிய சர்வதேச தலைவராகப் பரிணமித்திருக்கிறார்.



# ட்ரம்புக்கு மோடி கொடுத்த பதிலடி



**கோலாகல ஸ்ரீநிவாஸ்**
**(மூத்த பத்திரிகையாளர், இந்தியா)**

அமெரிக்காவில் இறக்குமதியாகும் இந்தியப் பொருள்களுக்கு ட்ரம்ப் விதித்த 50 சதவீத வரி ஒகஸ்ட் 27 நள்ளிரவு 12:01 மணி முதல் அமுலுக்கு வந்தது.

அதேநேரம், ஓர் அதிரடியான தகவல் கசிந்தது.

பிரதமர் மோடியுடன் பேச அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நான்கு முறை முயன்றார் எனவும் –

ஆனால், ட்ரம்பின் தொலைபேசி அழைப்புகளை மோடி நிராகரித்து விட்டார் என்றும் ஜேர்மன் நாளேடான ஃப்ராங்க்ஃபர்ட்டர் அல்ஜிமீன் (Frankfurter Allgemeine) தெரிவித்தது.

இது மோடியின் கோபத்தையும் எச்சரிக்கையுணர்வையும் காட்டுகிறது என்று அந்த நாளேடு கூறியுள்ளது.

ஜேர்மன் நாளேடு மேலும் கூறியுள்ளவை கவனிக்கத் தக்கவை.

"கடந்த சில வாரங்களுக்குள் நான்கு முறை மோடியை தொடர்பு கொள்ள ட்ரம்ப் முயன்றார். மோடியோ, மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் அவரது அழைப்புகளில் இணைந்து கொள்ளவில்லை. தவிர்த்துவிட்டார்.

ட்ரம்பின் அழைப்பை ஏற்றுப் பேசினால் – திடீரென்று செய்தியாளர்களிடம், "நான் மோடியுடன் பேசி விட்டேன். 'டீல்' முடிந்துவிட்டது" என்று ட்ரம்ப் கூசாமல் பொய் சொல்லக்கூடும்.

அண்மையில் வர்த்தக வரி விதிப்பு தொடர்பாக வியட்நாம் பிரதமருடன் தொலைபேசி மூலம் ட்ரம்ப் பேசினார். அதற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது" என்று அறிவித்தார். இதைக் கேட்டு வியட்நாம் பிரதமர் ஆடிப்போய் விட்டார். காரணம், இரு நாடுகளுக்கிடையே எந்த டீலும் முடியவில்லை. ஒரு மரியாதை நிமித்தமான அழைப்பாகத்தான் இருவரும் பேசிக்கொண்டனர்.

பொய் சொல்வதற்கு ட்ரம்ப் கூச்சப்படுபர் அல்லர். எனவே, அவரிடம் பேசுவது குறித்து மோடி மிக எச்சரிக்கையாக இருக்கிறார். ட்ரம்ப் விரித்த வலையில் மோடி விழவில்லை.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி கடைசியாக மோடியுடன் ட்ரம்ப் பேசியது ஜூன் 17 ஆம் திகதியில்.

அப்போது ஜி 7 மாநாட்டுக்காக கனடா போயிருந்தார் மோடி. கனடா வரை வந்த மோடியை அமெரிக்காவுக்கு வந்து தன்னைச் சந்தித்துவிட்டுச் செல்லுமாறு தொலைபேசியில் அழைப்பு விடுத்தார் ட்ரம்ப். ஆனால், வேறு ஒரு நாளில் சந்திப்பதாக சொல்லிவிட்டு, தாயகம் திரும்பிவிட்டார் மோடி. காரணம், ட்ரம்ப் அழைப்பு விடுத்த அதேநாளில் பாகிஸ்தான் தளபதி ஆசிம் முனீர் வொஷிங்டன்னில் இருந்தார். முனீருடன் மோடியையும் சேர்த்து அமர்த்தி – இரு நாடுகளுக்கு இடையே ஓர் இணக்கப்பாட்டை தான் கொண்டுவந்து விட்டார் எனஜ் கூறிக்கொள்ள திட்டமிட்டிருந்தார் ட்ரம்ப். அவரது சூழ்ச்சி வலையை மோடி கிழித்தெறிந்தார்.

அமெரிக்க அதிபரின் தொலைபேசி அழைப்பை நிராகரிக்கும் துணிச்சல், உலகத் தலைவர்களில் மோடிக்கு மட்டுமே உண்டு.

ட்ரம்ப் மீது மோடிக்கு எரிச்சல் வர பல காரணங்கள் உள்ளன.

- பாகிஸ்தான் தலைமை தளபதி ஆசிம் முனீருக்கு விருந்தளித்தது.
- பாகிஸ்தானுடன் இணைந்து எண்ணெய் வளத்தை பெருக்கவுள்ளோம் என்றும், எதிர்காலத்தில் பாகிஸ்தானிடமிருந்து பெட்ரோலை இந்தியாவே இறக்குமதி செய்யும் நாள் வரும் என்றும் ட்ரம்ப் கூறியது.
- இந்தியப் பொருளாதாரத்தை இறந்த பொருளாதாரம் என்றது.
- இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் நிறுத்தத்தை நான்தான் கொண்டு வந்தேன் என்று ட்ரம்ப் கூறியது – அதனை மோடி ஏற்க மறுத்தது.
- அமைதிக்கான நோபல் பரிசுக்கு தன் பெயரை பரிந்துரைக்குமாறு மோடியிடம் ட்ரம்ப் கேட்டது – அதை மோடி நிராகரித்தது.

தொடர்ச்சி▼



# ட்ரம்புக்கு மோடி கொடுத்த பதிலடி

தொடர்ச்சி▲

- ரஷ்ய – உக்ரைன் போருக்குக் காரணம் மோடி என கூறத் தொடங்கியிருப்பது .

– இப்படிா எனப் பல காரணங்கள் உள்ளன.

தனது தவறான அணுகுமுறையால் எதிரும் புதிருமாக இருந்த இந்தியாவையும் சீனாவையும் நெருங்கி வர வைத்துவிட்டார் ட்ரம்ப்.

தற்போது சீனாவும் இந்தியாவும் ஒன்றுக் கொன்று தேவைப்படுகின்றன.

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ ஆகஸ்ட் 19 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை டெல்லியில் சந்தித்துப் பேசினார். அப்போது, ஒகஸ்ட் 31 ஆம் திகதி சீனாவின் தியான் ஜின் நகரில் தொடங்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்க வருமாறு அழைப்பு விடுத்தார். அதையேற்றுக்கொண்ட பிரதமர் மோடி – 7 ஆண்டுகளுக்குப் பிறகு சீனா சென்றார்.

சீனாவைக் கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் 'இந்தோ – பசிபிக்' திட்டத்தில் நடுநாயகமாக இருப்பது இந்தியாதான். இப்போது அமெரிக்கத் திட்டம் நொறுங்கிக் கொண்டிருக்கிறது என்று ஜெர்மன் நாளேடு செய்தி வெளியிட்டிருக்கிறது.

### மோடி பதிலடி

ட்ரம்ப் விதித்த 50 சதவீத வரி ஒகஸ்ட் 27ஆம் திகதி முலுக்கு வரும் நிலையில், குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் பதிலடி கொடுத்தார் மோடி.

அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய மோடி, “எவ்வளவு அழுத்தம் வந்தாலும், அதைத் தாங்கும் வலிமையை நாங்கள் தொடர்ந்து அதிகரிப்போம். ஆத்மநிர்பர் பாரத் அபியான் மூலம் குஜராத்திலிருந்து நிறைய மின்சார ஆற்றலைப் பெற்றுள்ளோம். இதற்குப் பின்னால் 20 ஆண்டு கால கடின உழைப்பு உள்ளது” என்று குறிப்பிட்டார்.

அகமதாபாத் அருகே ஹன்சல்பூரில் உள்ள மாருதி சுசூகி வாகனத் தயாரிப்பு ஆலையில் அந்நிறுவனத்தின் முதல் மின்சாரக்காரான 'இ விட்டாரா' காரை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

அப்போது, அமெரிக்காவை நம்பியிருக்கும் நிலையிலிருந்து விடுபட – தொலைநோக்குத் திட்டம் ஒன்றை மோடி அறிவித்தார். அந்த தொலைநோக்குத் திட்டத்தின் பெயர் சுதேசி. அங்கு மோடி என்ன பேசினார் என்பதை பார்ப்போம்.

“நமது நாட்டு மக்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சுதேசி பொருள்களை மட்டுமே வாங்க வேண்டும். சுதேசி என்பதும் நமது வாழ்க்கை மத்திரமாக மாற வேண்டும். உள்நாட்டுப் பொருள்களை வாங்குவதில் பெருமிதம் கொள்ள வேண்டும்.

“முதலீட்டை யார் செய்தார்கள் என்பது முக்கியமல்ல. முதலீட்டுப் பணம் டொலராக இருந்தாலும் சரி – பவுண்டாக இருந்தாலும் சரி – அந்தப் பணத்திலிருந்து தயாரிக்கப்படும் பொருள் நமது மண்ணில் – நமது மக்களால் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அதுதான் சுதேசி.

“2047-ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். நமது நாட்டின் அடுத்த தலைமுறையின் நன்மை கருதி மக்கள் அனைவரும் சுதேசி இயக்கத்தில் இணைய வேண்டும்” – என்றார் மோடி.

இங்கு சுதேசி என்பதற்கு புதிய வரையறையை (definition) மோடி தந்திருப்பது கவனிக்கத்தக்கது.

இந்திய முதலீட்டில் இந்தியர்களால் இந்தியாவில் தயாரிக்கப்படுவதே சுதேசி என்று முன்னர் கருதப்பட்டு வந்தது.

ஆனால், மோடியின் புதிய வரையறைப்படி, முதலீடு எந்த நாட்டினருடையதாக இருந்தாலும், உற்பத்தி, இந்தியாவில் இந்தியர்களால் ஆனதாக இருக்க வேண்டும். அப்படியிருந்தாலே சுதேசிதான்.

சுதேசியை மோடி வலியுறுத்தியிருப்பதற்கு வலுவான பொருளாதார அர்த்தம் உள்ளது.

இனி, ஏற்றுமதியை நம்பி உற்பத்தியாளர்கள் நீண்ட தூரம் ஓட முடியாது. அவர்கள் ஏதேதோ நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சம்பாதிப்பதை – இந்தியாவுக்குள் விற்று சம்பாதிக்க முன்வர வேண்டும். அவர்களின் தயாரிப்புகளை ஆதரிக்க இந்தியர்களும் முன்வர வேண்டும்.


இதனைக் கருத்தில் கொண்டுதான், உள்நாட்டு உற்பத்தியையும், சுதேசி பொருகளையே வாங்க வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறார் மோடி.

### அதிரடி வரிக்குறைப்பு

சுதேசி பொருள்களை வாங்கும் பழக்கத்தை உற்சாகப்படுத்தத்தான் ஜிஎஸ்டி வரிக் குறைப்பும் அமலுக்கு வர உள்ளது.

இந்தியாவில் ஜி.எஸ்.டி. வரி (பொருள்கள் சேவை வரி) குறைப்பால், நேற்றுவரை 12 சதவீத வரியுடன் விற்கப்பட்டு வந்த பொருள்கள், இனி 5 சதவீத வரியுடன் கிடைக்கும். வாடிக்கையாளருக்கு 7 சதவீத வரி குறையும். இதுவரை 28 சதவீத

தொடர்ச்சி▼



# ட்ரம்புக்கு மோடி கொடுத்த பதிலடி

தொடர்ச்சி▲

வரியுடன் விற்கப்பட்டுவந்த பொருள்கள், இனி 12 சதவீத வரியுடன் கிடைக்கும். இதன் மூலம் நுகர்வோருக்கு 16 சதவீத வரி குறையும்.

ஜி.எஸ்.டி. வரிக்குறைப்பின் மூலம் விலைவாசி குறையும். வாங்கும் சக்தி கூடும். நுகர்வு அதிகரிக்கும். உற்பத்தி பெருகும். இன்னொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்துதான் தன் பொருளை விற்றாக வேண்டும் என்கிற கட்டாயத்திலிருந்து உற்பத்தியாளர்கள் விடுபடுவார்கள்.

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லையென்றாலும் – உள்நாட்டு நுகர்வு அதிகரிப்பால், உற்பத்தியான பொருள்கள் தேங்கா. அவற்றை இந்தியா என்கிற 140 கோடி மக்கள் கொண்ட– இந்தியா எனும் பெரும் சந்தையில் – இந்திய உற்பத்தியாளர்கள் விற்றுத் தீர்க்க முடியும்.

ஜி.எஸ்.டி. வரிக் குறைப்பும் – சுதேசியும் தற்செயலாக நேர்ந்தவை அல்ல. அவை, ட்ரம்புக்கு மோடி கொடுத்திருக்கும் பதிலடிகளாகும்.

### சீனாவின் தாராளம்

இத்தகைய முக்கியமான தருணத்தில், இந்தியாவுக்கான ஏற்றுமதி தடையை முழுமையாக நீக்கியிருக்கிறது சீனா.

குறிப்பாக உரங்கள், அரிய வகை தனிமங்களை இந்தியாவுக்கு தாராளமாக வழங்க அந்த நாடு முன்வந்திருக்கிறது. மேலும் சுரங்கங்களைத் தோண்டும் இயந்திரங்களை வழங்கவும் சீனா ஒப்புக்கொண்டிருக்கிறது.

இரு நாடுகளுக்கிடையிலான தரைவழி சரக்கு போக்குவரத்து மீண்டும் தொடங்கி உள்ளது. நதிநீர் தொடர்பான தகவல்களை இந்தியாவுக்கு உடனுக்குடன் வழங்கவும் சீனா ஒப்புதல் தெரிவித்திருக்கிறது. இதன்மூலம் இந்திய வேளாண் துறை, ஓட்டோ மொபைல் துறை அபார வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து இந்திய பொருளாதார நிபுணர்கள் என்ன கூறினர் என்பதை பார்ப்போம்.

முதல்முறையாக சீனா வளைந்து கொடுத்து இந்தியாவுக்கு சாதகமாக திரும்பியிருக்கிறது. இந்தியாவுக்கு தேவையான உரங்கள், அரிய வகை தனிமங்கள், சுரங்கம் தோண்டும் இயந்திரங்களை தாராளமாக வழங்க அந்த நாடு முன்வந்திருக்கிறது. இந்திய ஓட்டோமொபைல் நிறுவனங்களுக்கு ஓராண்டுக்கு 7,500 தொன் அரிய வகை தனிமங்கள் தேவைப்படுகின்றன. அவற்றை முழுமையாக வழங்க சீனா முன்வந்திருக்கிறது. இதன்காரணமாக இந்திய பங்குச் சந்தையில் கார் உற்பத்தி நிறுவனங்களின் பங்குகள் கணிசமாக உயர்ந்துள்ளன.

### சீனா - இந்தியா - ரஷ்யா பிராந்திய ஒன்றிணைவு

உலகின் 2 ஆவது பொருளாதார நாடான சீனாவும், விரைவில் 3 ஆவது பொருளாதார நாடாக உருவெடுக்கப் போகும் இந்தியாவும் கைகோத்திருப்பது, சர்வதேச அரங்கில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று இந்திய பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சூழ்நிலையில், இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் ஜவுளி, மருந்து, வேளாண் விளைபொருள்களை முழுமையாக வாங்கிக்கொள்ள ரஷ்யா முன்வந்திருக்கிறது.

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் வெளிநாட்டினருக்கான குடியேற்ற விதிமுறைகளை கடுமையாக்கி வரும் சூழ்நிலையில், இந்தியர்களை அதிக அளவில் வேலையில் சேர்க்க ரஷ்ய நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன.

இது குறித்து ரஷ்யாவுக்கான இந்திய தூதர் வினய் குமார் டாஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் என்ன கூறியுள்ளார் என்பதை பார்ப்போம்.

ரஷ்யாவில் மனித வளம் தேவைப்படுகிறது. இந்தியாவில் திறமையான மனிதவளம் உள்ளது. எனவே, ரஷ்ய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு அந்நாட்டு நிறுவனங்கள் அதிக அளவில் இந்தியயர்களைப் பணியமர்த்தி வருகின்றன.

குறிப்பாக கட்டுமானம் மற்றும் ஜவுளி துறைகளில் பெரும்பாலானவர்கள் பணியமர்த்தப்படுகின்றனர். இதுபோல இயந்திரங்கள் மற்றும் மின்னணு துறைகளிலும் இந்தியர்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக தூதரக சேவைகளின் பணிச் சுமை அதிகரித்து வருகிறது என்று வினய்குமார் தெரிவித்தார்.

இந்தியா, ரஷ்யா இடையே புதிய பொருளாதார வழித்தடத்தை (ஐ.என்.எஸ்.டி.சி.) செயல்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதன்படி இந்தியாவில் இருந்து சரக்கு கப்பல்கள் மூலம் ஈரான் துறைமுகங்களுக்கு பொருள்கள் கொண்டு செல்லப்படும். அங்கிருந்து சாலை, ரயில் மார்க்கமாக காஸ்பியன் கடல் பகுதிக்கு இந்திய பொருள்கள் எடுத்துச் செல்லப்படும். பின்னர்

தொடர்ச்சி▼

# ட்ரம்புக்கு மோடி கொடுத்த பதிலடி

**தொடர்ச்சி▲**

காஸ்பியன் கடல் வழியாக சரக்கு கப்பல்கள் மூலம் ரஷ்ய துறைமுகங்களுக்கு பொருள்கள் கொண்டு சேர்க்கப்படும்.

இதே வழித்தடத்தில் ரஷ்யாவில் இருந்து மசகு எண்ணெய், இயற்கை எரிவாயு, இயந்திரங்கள், உரங்கள் இந்தியாவுக்கு கொண்டு வரப்படும். இந்த வழித்தடத்தில் ரஷ்யா மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படும். மேலும் ரஷ்யாவில் இருந்து ஆர்டிக் பகுதி வழியாக இந்தியாவுக்குச் சரக்கு கப்பல் போக்குவரத்தை தொடங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக், இந்தியாவின் சென்னைக்கு இடையே புதிய கடல் வழித்தடம் திட்டத்தை செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தற்போது ரஷ்யாவின் பீட்டர்ஸ்பர்க் நகரில் இருந்து மும்பைக்கு 8,675 கி.மீ. தொலைவுக்கு சரக்கு கப்பல்கள் பயணம் செய்கின்றன. விளாடிவோஸ்டிக்- சென்னை கடல்வழித்தடத்தில் பயண தொலைவு 5,647 கி.மீ. ஆக குறையும்.

இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய தூணாக ரஷ்யாவுடனான உறவு விளங்குகிறது. தற்போது அது மீண்டும் உறுதிப்பட்டிருக்கிறது.

**ஜெய்சங்கர் விளாசல்**

இதற்கு மத்தியில் முந்திய வாரம் சனிக்கிழமையன்று பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அமெரிக்காவை விளாசித் தள்ளினார். அவர் என்ன கூறினார் என்பதை பார்ப்போம்.

"ரஷ்யாவிடமிருந்து எண்ணெய்யை அதிகம் வாங்கும் நாடு சீனா. ஆனால் அந்நாட்டின் மீது அதிக வரி விதிக்கப்படவில்லை. ரஷ்யாவிடமிருந்து அதிக எல்.என்.ஜி. (LNG - திரவ எரிவாயு) வாங்குவது ஐரோப்பிய ஒன்றியம். ஆனால், அதன் மீதும் கூடுதல் வரி விதிக்கப்படவில்லை. ஆனால், இந்தியா மீது மட்டும் கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. இது நியாயமற்றது" என்றார் ஜெய்சங்கர்.

இதை தொடர்ந்து அமெரிக்காவிலேயே ட்ரம்புக்கு எதிர்ப்பு வலுக்கத் தொடங்கியுள்ளது.

ஐ.நாவுக்கான முன்னாள் அமெரிக்க தூதரும் குடியரசுக் கட்சித் தலைவருமான நிக்கி ஹேலி, இந்திய – அமெரிக்க உறவுகள் பற்றி 'நியூஸ் வீக்' வார ஏட்டில் ஒரு கட்டுரை எழுதினார்.

'சீனாவை எதிர்கொள்ள இந்தியாவை நட்பு நாடாக வைத்திருக்க வேண்டியது அமெரிக்காவுக்கு அவசியம்' என்று கூறியுள்ளார் நிக்கி ஹேலி.

ஒபாமா ஆட்சிக் காலத்தில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த ஜோன் கெர்ரி என்ன கூறினார் என்பதை பார்ப்போம்.

"தனது தவறான கொள்கைகள் மூலம் அமெரிக்காவின் நட்பு நாடுகளை ஒவ்வொன்றாக அந்நியப்படுத்தி வருகிறார் டிரம்ப். அவருக்கும் பிரதமர் மோதிக்கும் இடையிலான பதற்றம் வருத்தமளிக்கிறது. ஒரு பெரிய நாடு தனது மகத்துவத்தைக் காட்ட, மற்ற நாடுகளை அச்சுறுத்த வேண்டியதில்லை. ராஜதந்திர வழிகளை விட, உத்தரவு மற்றும் அழுத்தம் மூலம் தீர்வுகளைத் தேட ட்ரம்ப் முயல்கிறார். 60 சதவீதப் பொருள்களுக்கான வரிகளை பூஜ்ஜியமாகக் குறைக்க இந்தியா முன்வந்துள்ளது. இது மிகப்பெரிய மாற்றம்" என்றார் ஜான் கெர்ரி.

அமெரிக்காவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன், இந்தியா மீது டிரம்ப் விதித்த வரிகளுக்கு, கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

"ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதற்காக இந்தியா மீது டிரம்ப் வரி விதிக்கிறார். ஆனால், இந்தியாவை விட அதிக எண்ணெய் வாங்கும் சீனா மீது வரி விதிக்கவில்லை. இதன்மூலம், சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இந்தியாவை இன்னும் நெருக்கமாக்கியிருக்கிறார்." -என சமீபத்தில் அளித்த நேர்காணலில் ஜோன் போல்டன் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் புடின் இந்தியாவுக்கு வரவிருக்கின்றமையையும், 2018-க்குப் பிறகு மோடி முதன் முறையாக சீனாவுக்குச் செல்கின்றமையையும் போல்டன் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ட்ரம்பின் குளறுபடி**

அமெரிக்க அதிபரின் வர்த்தக ஆலோசகரான பீட்டர் நவரோவின் ஒரு காணொளியை அரசியல் விஞ்ஞானியான இவான் ஏ. ஃபீகன்பாம் பதிவிட்டிருந்தார். அந்தக் காணொளியில் என்ன கூறப்பட்டிருந்தது என்பதை பார்ப்போம்.

"ஆரம்பத்தில் ரஷ்யாதான் போருக்கான காரணம் என்றார் ட்ரம்ப். பிறகு ஜெலன்ஸ்கிதான் போருக்குக் காரணம் என்றார். பின்னர், சீனாவையும் மற்ற நாடுகளையும் காரணமாக கூறினார். இப்போது இந்தியாதான் போருக்கு காரணம் என்கிறார். இந்த அணுகுமுறையால், இந்தியாவுடன் உறவுகளை வலுப்படுத்த கடந்த 25 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட அத்தனை முயற்சிகளும் வீணாகிவிட்டன.

"டிரம்பின் வரிவிதிப்புக்கள் இந்தியாவை சீனா மற்றும் ரஷ்யாவுடன் நெருக்கமாகக் கொண்டு செல்கின்றன. தற்போது இந்தியாவின் நிலைப்பாடு கிழக்கு நோக்கிச் சாய்ந்துள்ளது. சமீபத்தில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மாஸ்கோவுக்குச் சென்றார். இந்த வாரம் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் அங்கு செல்கிறார். சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ சமீபத்தில் இந்தியாவுக்கு வந்தார். பிரதமர் மோடி ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு சீனா செல்கிறார். இதையடுத்து, இனி, குவாட் கூட்டமைப்பு தொடருமா என்ற கேள்வி எழுந்துள்ளது" என ஃபாக்ஸ் நியூஸ் குறிப்பிட்டுள்ளது.

சி.என்.என். செய்திச் சேவையில் பத்திரிகையாளர் ஃபரீத் ஜகாரியா என்ன கூறினார் என்பதை பார்ப்போம்.

"இந்தியாவுடன் நெருங்குவதற்காக கடந்த 25 ஆண்டுகளாக 5 அமெரிக்க அதிபர்கள் மேற்கொண்ட அத்தனை முயற்சிகளையும் ட்ரம்ப் ஒன்றுமில்லாமல் செய்து விட்டார். இனிமேல் தனது கொள்கையை டிரம்ப் மாற்றினாலும், ஏற்பட வேண்டிய பாதிப்பு ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது. 'அமெரிக்கா நம்பகமான நாடல்ல' என்ற எண்ணம் இந்தியாவில் பரவலாக உருவாகிவிட்டது" என்று ஃபரீத் ஜகாரியா கூறியுள்ளார்.

உள்நாட்டிலேயே ட்ரம்ப் மீதான விமர்சனங்கள் வலுத்து வருகின்றன. இனி ட்ரம்ப் இறங்கி வந்தாலும், மோடி இறங்கி வருவது கடினமே.

தனது ஒற்றை வரி உத்தரவுகள் மூலம் சகலவற்றையும் சாதித்துவிட முடியும் என நம்புகிறார் ட்ரம்ப்.

அமெரிக்காவுக்கு மட்டுமே தான் அதிபர், உலகிற்கு அல்ல என்பதை ட்ரம்ப் நினைவிற் கொண்டால், அவருக்கும் நல்லது. அனைவருக்கும் நல்லது.



# காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பில் கலந்தாய்வு

## யாழ். அரச அதிபர் தலைமையில் செயலகத்தில்



காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிர தீபன் தலைமையில்நேற்று (03) அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் இந்திய இலங்கை கடல் போக்குவரத்துக்கு மேலதிகமாக இந் தியாவில் இருந்து கப்பல் மூலம் பொருள் களைக் கொண்டுவருதல் மற்றும் இங்கி ருந்து பொருள்களைக் கொண்டு செல்லல் தொடர்பிலும் அதன் மூலம் ஏற்படும் தொழில் வாய்ப்பு மற்றும் சாதக பாத கங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி தேவைகளுக்கான காணித் தேவைப்பாடு தொடர்பாகவும், இந்தத் துறைமுக அபிவிருத்தியை ஏற்படுத்து வதனூடாக எவ்வாறான சிறப்பான சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் ஆராயப்பட்டது.

அல்லது அதனால் ஏற்படும் பாதக விளைவுகள் தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டது.

குறிப்பாகப் பிராந்திய இணைப்பை வலுப்படுத்துதல், வர்த்தகத்தை எளிதாக் குதல் மற்றும் வடக்கு மாகாணத்திற்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குதல், வேலை வாய்ப்புக்கள், சுற்றுலாத்துறை வளர்ச்சி, சுற்றுச்சூழல் தாக்கம், சமூக நடத்தையில் ஏற்படும் மாற்றம், அரச சேவைகள், போக்கு வரத்து சேவைகள் போன்றவற்றின் அபிவிருத்திசார் விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது .

கலந்துரையாடலில் இலங்கை துறை முக அதிகாரசபை உதவி முகாமைத்துவ பணிப்பாளர் ஜெ.ஏ.சந்திரரத்ன, பிரதம பொறியியலாளர் . சி.எல்.தசநாயக்க, திட்ட ஒருங்கிணைப்பாளர் பி. கெட்டியாராய்ச்சி, பிரதம பொறியியலாளர் எஸ்.எச்.எம்.பி. அபயசேகர, நிகழ்சித்திட்ட முகாமையாளர் தேவசுரேந்திரா, பிரதம பொறியியலாளர் கே.ஆர்.என்.என்.எம் காரியவசம், யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் பணிப் பாளர் இ. சுரேந்திரநாதன், உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ.தர்சினி மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




# தேவையுடைய வயோதிப் பெண்ணுக்கு சக்கர நாற்காலி ஒன்று வழங்கப்பட்டது!



**(த.சுபேசன்)**

சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகம் ஊடாகக் கடந்த சனிக்கிழமை நெல்லியடியில் உள்ள தேவைப்பாடுடைய வயோதிபப் பெண் ஒருவருக்கு சக்கர நாற்காலி ஒன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தனியார் ஒருவரான லிந்துயன் என்பவருடைய நிதியுதவியில் இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.





# கரையோர பூங்காக்கள் அமைக்கும் திட்டம் சாய்ந்தமருதிலும் அங்குரார்ப்பணை நிகழ்வு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அரசாங்கத்தின் 100 பசுமையான கரையோரப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்துக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவால் சாய்ந்தமருது சதுக்கத்தை அண்மித்த பிரதேசத்திலும் அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள பொறியியலாளர் எம். துலஷிதாஸன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



குறித்த இந்தத் திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் முன்மொழிவுக்கு அமைவாக, கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இன்னும் 8 பூங்காக்கள் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா பெண்கள் அணியினர் தேசிய மட்டத்தில் உடற்பயிற்சிப் போட்டியில் சாதனை



தேசிய மட்டத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி பெண்கள் அணியினர் முதலாம் இடத்தைப் பெற்றனர்.

சிறந்த அணித் தலைவியாக ச. றன்சிகா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை வரலாற்றில் உடற்பயிற்சி அணி தேசியமட்டம் சென்று வெற்றி பெற்றமை இதுவே முதற்தடவை என்று கூறப்படுகிறது.

வெற்றிபெற்ற உடற்பயிற்சி அணியினருக்கான பாராட்டு விழா இன்று (04) காலை 8 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் . ம. பற்றிக் டிரஞ்சன் கலந்து கொள்ளவுள்ளார்.

# நீண்ட காலமாகக் கைவிடப்பட்டிருந்த அன்னமலை பொதுச்சந்தை துப்புரவு



**( வி.ரி.சகாதேவராஜா)**



நாவிதன்வெளிப் பிரதேச சபைக்கு உட்பட்ட நீண்ட காலமாக கைவிடப்பட்டிருந்த அன்னமலை – 01 பொதுச் சந்தைக் காணி பிரதேச சபையின் ஏற்பாட்டில் நேற்று (03) புதன்கிழமை துப்புரவாக்கப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் இ. ரூபசாந்தன் மற்றும் செயலாளர் பா.சதீஸ்கரன் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக கிளீன் ஶ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் துப்பரவு செய்யப்பட்டது.

இதில் குறித்த பிரதேச சபை உறுப்பினரும் கலந்து கொண்டிருந்தார்.

பிரதேச சபையின் வளங்களுள் ஒன்றாகக் காணப்படும் இந்தப் பொதுச் சந்தைக் காணியானது நீண்ட காலம் பராமரிப்பு இல்லாமல் பற்றைகளால் சூழப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 159ஆவது ஆண்டு நிறைவில் உதவிகள்

(பாறுக் ஷிஹான்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 159 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு ஏற்பாட்டில் கல்முனை இயேசு சீவிக்கின்றார் இல்ல சிறுவர்களுக்கான கற்றல் உபகரண தொகுதிகள் நேற்று (03) வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வானது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். ரம்ஷீன் பக்கீர்ரின் வழிகாட்டலில் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல பிரதம அதிதியாகக் கலந்த கொண்டு முதலில் குறித்த இல்ல சிறுவர்களின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்தார். நிகழ்வில் கலந்து கொண்டு அறிவுரையும் வழங்கினார்.

எதிர்காலம் மோசமான நிலையில் சென்று கொண்டு இருக்கின்றது. பிள்ளைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள்.தற்போது படிப்புகளில் சிறுவர்கள் கவனம் செலுத்துவதும் குறைவு. எனவே சிறுவயது முதல் எமது பிள்ளைச் செல்வங்களை நாங்கள் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும். சிறுவர்களுக்கு உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற அனைவரும் ஒத்துழைப்புகளை நல்க வேண்டும் என அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கேட்டுக்கொண்டார்.



நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எச். கலன சிறி, கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ. வாஹீட், பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# மன்னார் மக்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்று காற்றாலை, கனிய மணல் திட்டங்களை வெளியேற்றுக!

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் கோரிக்கை




**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டததுக்கும் மக்களின் கோரிக்கைகளுக்கும் ஜனாதிபதி தலை சாய்த்து நடைமுறைப்படுத்தி வருகின்ற காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய இரு திட்டங்களையும் வெகு விரைவில் மன்னார் தீவில் இருந்து வெளியில் கொண்டு சென்று மக்களின் வாழ்விடங்கள் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு மன்னார் மக்கள் சார்பாகக் கோரிக்கை விடுத்துள்ளார் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார்.

காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று புதன்கிழமை (03) 22 நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மன்னார் பனங்கட்டுகொட்டு மற்றும் கீரி கிராம பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களினுடைய வாழ்விடங்களைப் பாதுகாக்கும் முகமாக நாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் போராட்டம் 22 நாளாகத் தொடர்கின்றது.

அரச தரப்பில் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து முயற்சிகளும், தமது காரியங்களை மிகவும் சாதுரியமாக நிறைவேற்றுவதற்காகவே, இந்த முயற்சி மிகவும் தாமதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை எண்ணத் தோன்றுகிறது.

இந்தச்செயல்பாடுகள் எமக்குக்கவலையைத் தருகின்றன. மன்னார் செயலகம் இதுவரைக்கும் எவ்வித கண்காணிப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்காது தவிர்த்து வருவது கண்டனத்துக்கு உரியதும் கவலைக்கு உரியதுமான விடயமாகும்.

மன்னார் மாவட்டச் செயலகம் மும்முரமாக இந்த பணியில் இறங்கி மக்களின் வேண்டுகோளையும், மக்களின் வேதனைகளையும் அரசுக்கு தெரிவிக்க வேண்டிய கடமை உள்ளது.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் செயல்பாடுகள் மந்தமாக இருப்பதால் மக்களின் நலனை கருத்தில் கொண்டு மாவட்டச் செயலகம் துரிதமாக செயல்பட வேண்டும்.

எங்களுடய உரிமைகளை நாங்கள் முழுமையாக அனுபவித்து வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தி எமது மண் பறி போவதை தடுத்து நிறுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்று மன்னார் மாவட்ட செயலகத்திடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

நாட்டின் ஜனாதிபதி, எமது கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்து நடைமுறைப் படுத்தி வரும் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய இரு திட்டங்களையும் வெகு விரைவில் மன்னார் தீவில் இருந்து வெளியில் கொண்டு சென்று மக்களின் வாழ்விடங்கள் பாதுகாக்க வேண்டும் என்று மன்னார் மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

ஏற்கனவே மன்னார் தீவின் அமைக்கப்பட்ட 30 காற்றாலை கோபுரங்களால் ஏற்பட்ட பாதிப்புக்களும் உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

மக்களுக்கு உகந்த செயல்பாடுகளை முன்னெடுத்து மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழ்வியலையும் பாதிக்கும் செயல்பாடுகள் முற்று முழுதாக நிறுத்த வேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுக்கிறேன்.– என்றார்.





# மாணவத் தூதுவர் தேசிய நிகழ்ச்சித்திட்டம்!



(ஹஸ்பர் ஏ.எச்.)

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான "மாணவத் தூதுவர் தேசிய வேலைத்திட்டம் தொடர்பான செயலமர்வானது திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று (03) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சியை வழங்கும் நோக்கில் திருகோணமலை மாவட்ட செயலகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கல்வி அமைச்சும் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தன.

சிறுவர்களின் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சேவைகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளல், மாணவர் தலைவர்கள் தமக்கான தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளும் விதம், பாடசாலைகளின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் இதன்போது மாணவர்களின் மத்தியில் தெளிவூட்டப்பட்டன.

இந்த நிகழ்வு சிறுவர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை உயர்த்தி, மாணவர்களைச் செயற்பாட்டாளர்களாக உருவாக்கும் வகையில் முன்னெடுக்கப் பட்டது. இதன்போது மாணவர் தலைவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தலைப்புகளின் அடிப்படையில் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ தலைவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.





# திருக்கோவில் தாண்டியடி பிரதேசத்தில் செப். 14இல் மாபெரும் மருத்துவ முகாம்

**(ஏ.எல்.றியாஸ்)**

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் இலவச மருத்துவ முகாம் திருக்கோவில் தாண்டியடி பிரதேசத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபள்யூ.ஜீ.திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த மருத்துவ முகாம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் (02) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்து நடவடிக்கைகளில் கஷ்டங்களை எதிர்கொண்டு, மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ளும் பிரதேச மக்களின் நலன்கருதி குறித்த பிரதேசங்களில் மேலதிக மருத்துவ முகாம்களை நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். இவ்வாறான மருத்து முகாம்களை நடத்துவதற்குக் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளரின் ஒத்துழைப்புகள் கிடைத்துள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சுகாதார சேவைகள் திணைக்களம், சுதேச மருத்துவ திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம் என்பன இணைந்து இந்த மருத்துவ முகாமில் பொது மக்களுக்கான சேவைகளை வழங்கவுள்ளன.

இந்த மருத்துவ முகாமில் நோயாளர்களுக்குச் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. குறிப்பாக விசேட வைத்திய நிபுணர்களின் சேவைகள், பல் மருத்துவ சேவை, தொற்று நோய் மற்றும் தொற்றா நோய் பரிசோதனைகள், சுகாதாரக் கல்வி உட்பட விழிப்புணர்வு கருத்தரங்குகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

திருக்கோவில், ஆலையடிவேம்பு, பொத்துவில் பிரதேச மக்கள் இம்மருத்துவ முகாமில் கலந்துகொண்டு நன்மையடைய முடியும். விசேடமாக தூர பிரதேச கிராமப் புறங்களில் உள்ள மக்களின் நலன்கருதி போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக இந்த மருத்துவ முகாமுக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பெரும் பங்களிப்புக்களை வழங்கியுள்ளது.– என்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.கரண், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் கே.இளங்குமுதன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் எம்.ஏ. நபீல் உள்ளிட்டோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனையில் கடற்கரைப் பூங்கா அமைப்பு!





**(வி.ரி. சகாதேவராஜா)**

ஜனாதிபதியின் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டத்தின் கீழ் கடற்கரை கரையோர பிரதேசங்களில் பூங்காக்கள் அமைக்கும் வேலைத் திட்டத்தின், முதலாவது வேலைத் திட்டமாக கல்முனை – 02 இல் கரையோரப் பகுதியில் அடிக்கல் நட்டு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம் பாவா கலந்து கொண்டார்.

கரையோர பாதுகாப்பு துணைக்களத்தின் அதிகாரி எஸ்.துளசிநாதன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் மற்றும் பல உத்தியோகத்தர்களும் பொது மக்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தால் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டத்தின் கீழ் 14 லட்சம் ரூபா பெறுமதியான 100 பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.



# மன்னார் ஜோசப் வாஸ் கிராமத்தில் நடந்த இலவச சித்த மருத்துவ முகாம்





**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

பேசாலை கிராமிய சித்த மருத்துவ மனையின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் யாழ். பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவ பீடமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச சித்த மருத்துவ முகாம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் ஜோசப் வாஸ் நகர் கிராமத்தில் இடம் பெற்றது.

சித்த மருத்துவத்தின் ஊடாக சுகாதார சுகாதார மேம்பாடு எனும் தொனிப் பொருளில் இந்த மருத்துவ முகாம் இடம் பெற்றது.

பக்க விளைவுகள் அற்ற மூலிகை மருத்துவத்தின் ஊடாக மக்களுக்குச் சேவை முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்தப் பிரதேச மக்களின் மருத்துவ தேவையைக் கருத்தில் கொண்டு இலவச சித்த மருத்துவ முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வைத்திய ஆலோசனைகள், உள நல ஆலோசனைகள், ஆரம்ப ஆய்வு கூட பரிசோதனைகள் உள்ளிட்ட சேவைகள் முன்னெடுக்கப் பட்டதோடு இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணக் கல்விப் புலத்தில் நிலவும் நிர்வாகத் தாமதங்களைச் சீர்படுத்துங்கள்!

## இம்ரான் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

கிழக்கு மாகாண கல்வியமைச்சு, கல்வித் திணைக்களம் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களில் நிலவும் நிர்வாகத் தாமதங்களை சீர்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

ஆசிரியர்களால் அனுப்பப்படும் கடிதங்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்களில் இருந்து உரிய காலத்தில் பதில் அனுப்பப்படுவதில்லை. இதனால் தாம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பது தொடர்பில் எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.



ஆசிரியர்களது பதவி உயர்வு, பதவியில் உறுதிப்படுத்தல், வெளிநாடுகளுக்கான சமய யாத்திரை விடுமுறை, வெளிநாடுகளுக்கான சம்பளமற்ற விடுமுறை, மாகாணங்களுக்கான இடமாற்றம், ஓய்வு விண்ணப்பம் உள்ளிட்ட பல விடயங்களுக்காக ஆசிரியர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வலயக் கல்வி அலுவலகங்களில் வாரக்கணக்கில் தாமதிக்கப் படுகின்றன. அதேபோல மாகாணக் கல்வித் திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சு ஆகியவற்றில் வாரக் கணக்கில் தாமதிக்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இது தொடர்பில் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய அலுவலகங்களுக்கு நேரில் சென்றாலும் விடயத்துக்குப் பொறுப்பானவர்களால் சரியான பதில் வழங்காது அலைக்கழிக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

எனவே, இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாணக் கல்வி புலத்தில் நிலவும் இந்த நிர்வாகத் தாமதங்களைச் சீர்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.– என்றுள்ளது.






# சென்மேரீஸ் கனிஷ்ட தமிழ் வித்தியாலய கலைவிழா!

**(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)**

ஹட்டன் கல்வி வலையத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ சென்மேரீஸ் கனிஷ்ட தமிழ் வித்தியாலயத்தின் கலைவிழா வித்தியாலயத்தின் அதிபர் மார்ஷல் ராஜா நாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது விழாவில் கலந்து கொண்ட அதிதிகள், பாரம்பரிய கலைச்சாரங்கள் உள்ளடக்கிய பறை வாத்தியங்கள் முழங்க பொகவந்தலாவ நகரத்தில் இருந்து விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து ஹட்டன் கவ்வி வலையத்தின் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளில் பணியாற்றி இவ்வருடம் ஒய்வு பெறவிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்கள் ஆகியோர் பொன்னாடை போர்த்தி பாடசாலை நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் ஹலைன்ஸ் கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் பிரதி அதிபர் பி.சுகுமார், அதே கல்லூரியைச் சேர்ந்த பிரதி அதிபர் தேன்மொழி, ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரியர் ஆலோசகர் ஜெயந்தி, ஹட்டன் கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவுக்கான விவசாய விஞ்ஞான பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகர் மைக்கல், பொகவந்தலாவ தெரேசியா தமிழ் வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் சின்னையா சுப்ரமணியம், நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவின் ஆசிரியர் வீ.கதிர்காமன், தெரேசியா தமிழ் வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியை இராசையா தங்கமலர், ஆசிரியை மல்லிகா, ஓய்வு பெறவிருக்கும் ஆசிரியை பெரியசாமி ரஜனி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

புலமை பரீசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்குச் சான்றுதழ்கள் மற்றும் பதக்கங்கள், நினைவுப் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.









# புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கலவைமுறைக்கற்றலின் பயன்படுதன்மையும் எதிர்நோக்கும் சவால்களும்!

இன்றைய நவீன உலகில் பொருளாதாரம், கலாசாரம், தொழிநுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் பாரிய மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இம்மாற்றங்களுக்கு அடிப்படையாய் கல்வித் துறையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இது அறிவுசார் துறைகளில் மாத்திரமன்றிக் கற்பித்தல் முறைகள், கல்வித் தொழிநுட்பம் என்பவற்றிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு வருவது உலகறிந்த உண்மையாகும்.

21 ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்படும் பூகோளவியல் கல்வி மாற்றத்துக்கு ஏற்ப இலங்கையிலும் 2026 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வி மறுசீரமைப்பு நடைபெறுவதற்கான முன்னெடுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இக்கல்வி மறுசீரமைப்பு செயற்பாட்டினூடாக இலங்கையின் கல்வித்துறையில் பாரிய மாற்றங்கள் நிகழும் என தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், கல்வியலாளர்கள் என பலர் முன்மொழிகின்றனர்.

இதில்,

- செயற்பாட்டுடன் கூடிய கற்றல்.
- பாடநூல் சுமையை குறைப்பதற்காக மொடியூல் அடிப்படையிலான கல்வி முறைமை.
- தேர்ச்சி, தேர்ச்சிமட்டம் என்ற வாசகங்கள் நீக்கப்பட்டு கற்றல் பேறுகளைக் கொண்ட கலைத்திட்ட முறை.
- ஏதிர்கால தொழில் வாய்ப்பு, பொருளாதாரத்தை நோக்காகக் கொண்ட தொழில் சார்ந்த கற்கைகளுக்கான உயர்வாய்ப்பு உள்வாங்கப்பட்டிருத்தல்.
- தர(Credit) அடிப்படையில் பாடங்களுக்கான நேர ஒதுக்கீடு.
- மாணவர் மையக்கற்றல்.
- பாடவேளைக்கான நேரம் அதிகரிக்கப்பட்டிருத்தல்.
- தரம், GPA,GPV இணை அடிப்படையாகக் கொண்ட தொடர் மற்றும் இறுதிக் கணிப்பீடு.
- 21 ஆம் நூற்றாண்டின் திறன்களை அடையும் வகையிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்.
- STEM கலப்புக் கற்றல் அம்சங்களை கொண்டிருத்தல்.

போன்ற பல்வேறு மாற்றங்களை உள்ளடக்கியதாக அதன் வடிவமைப்பாளர்கள் தெளிவூட்டல்களை வழங்கி வருகின்றனர். இது இவ்வாறிருக்க இதற்கு முன்னரும் இவ்வாறான கல்வி மறுசீரமைப்பு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் அவை தோல்விகளைத் தழுவியுள்ளது. இவ்விடயம் தொடர்ந்து அளவளாவப்பட்ட போதிலும் இதன் சாத்தியப்பாடுகள், அமுல்படுத்தப்படும் போது ஏற்படும் பிரச்சினைகள், ஆசிரியர்கள் இதனை கையாழும் திறன், பாடசாலையிலுள்ள வளங்கள், பெற்றோரின் பங்களிப்பு என்பவற்றில் இதன் வெற்றி தங்கியுள்ளமை முன்னர் கற்ற அனுபவத்தின்படி வெற்றிக்கனி சவாலாக மாறுவதற்கே வாய்ப்புகள் அதிகம் உண்டு.

இங்கு புதிய கல்வி மறுசீரமைப்பு செயற்பாட்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள கற்றல் கற்பித்தல் முறைகளில் கலப்புமுறைக்கற்றல் (Blended Learning) பிரதானமாக காணப்படுகின்றது. கலவைமுறைக் கற்பித்தல் (Blended Learning) என்பது பாரம்பரிய கற்பித்தல் முறைகளையும்,இணையவழிக்கற்பித்தல் முறைகளையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்கபடும் ஒரு நவீன கற்பித்தல் முறையாகும்.

பொதுவாக கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் பிரதான நுகர்வோராக மாணவர்களும், சந்தைப்படுத்துனராக ஆசிரியர்களும் காணப்படுகின்றமையால் இவ்விருவரின் தற்கால இயல்புகள் பற்றியும் பரம்பரை தொடர்பு பற்றியும் அறிந்திருப்பது ஊசிதமாகும்.

ஆரம்ப காலங்களில் பாரம்பரிய கல்வி முறையானது ஒரு வழிக் கடத்தலை மேற்கொள்கின்ற செயற்பாடாக காணப்பட்டது.

தற்போதுள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும் எடுத்து நோக்கும் போது அவர்களிடையே பாரிய பரம்பரை இடைவெளி (Generation Gap)காணப்படுகின்றன.ஆசிரியர்கள் ஓ பரம்பரையினராகவும் (1965-1979) (46-60 வயது) மாணவர்கள் அல்பா பரம்பரையினராகவும் (2010-2024) காணப்படுவதால் இருவருக்கும் இடையிலான மிகப்பெரிய பாரம்பரை இடைவெளி காரணமாக உடல்,உள,மனவெழுச்சிகளில் மாற்றங்கள்,வேறுபாடுகள் காணப்படுகின்றன.இம்மாற்றங்களையுணர்ந்து புதிய கல்வித் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.21 ஆம் நூற்றாண்டின் கலைத் திட்டமானது 4 சி கோட்பாட்டு திறன்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்றது.

- Critical Thinking-விமர்சன ரீதியான சிந்தனை
- Creativity-புத்தாக்கம்

தொடர்ச்சி▼

# புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கலவைமுறைக்கற்றலின் பயன்படுதன்மையும் எதிர்நோக்கும் சவால்களும்!

**தொடர்ச்சி▲**

- Collobration-ஒத்துழைப்பு
- Communication-தொடர்பாடல்

அத்துடன் உலகமானது இன்று ஒரு அலை பேசியினுள் அடக்கப்பட்டுள்ளது.

அல்பா பரம்பரையினர் தொழிநுட்ப பயன்பாடு, விரைவான தகவல்களைப் பெறல்,டிஜிடல் தொடர் பாடல்,தனிப்பட்ட கற்றல் இயல்பு, சமூக விழிப் புணர்வு கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறான மாற்றங்களுடன் காணப்படும் பரம்பரையினருக்கு எவ்வாறு கற்பித்தல் வேண்டும் என்பதைக் கலவைமுறைக் கற்பித்தல் அணுகுமுறை (Blended Learning) வழிகாட்டுகின்றது.

புளுமின் நவீன கற்றல் கூம்பானது பாரம் பரிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட் டில் இருந்து மாறுபடுகின்றது. பகுப்பாய்வு, மதிப்பீடு, ஆக்கத்திறன் என்ற அடிப்படையில் மாற்றமடைந் துள்ளது. எனவே நவீன கற்பித்தல் முறைகளும் புதிய கண்டுபிடிப்புகளை நோக்கி நகர்தல் வேண்டும்.

கலவைமுறைக் கற்பித்தல் அணுகுமுறை (Blended Learning Approach) என்பது பாரம்பரிய கற்றல் கற்பித்தல் முறைகளையும்,இணையவழிக் கற்றல் கற்பித்தல் முறைகளையும் ஒருங்கிணைத்துக் வழங்கப்படும் ஒரு நவீனஅணுகு முறையாகும்.

இதில்,

1.நேரடி வகுப்பறைக் கற்பித்தல்- மாணவரும் ஆசிரியரும் நேரடி ஈடுபாட்டுடன் விடயங்களைக் கற்பர். இங்கு விவாதங்கள், குழுச்செயற்பாடுகள், செய்முறைப் பயிற்சிகள் இடம்பெறும்.

2.இணையவழிக் கற்பித்தல் - மாணவர்கள் கணினி, இணையம், கையடக்கத் தொலைபேசிகள், டிஜிடல் தளங்கள் மூலம் விடயங்களைக் கற்றுக் கொள்வர்.

- வீடியோ படங்கள், வினாக்கள், இலத்திரனி யல் புத்தகங்கள் (E-Book) போன்றவற்றைக் கொண்டு தாம் விரும்பிய நேரங்களில் கற்றுக் கொள்ள முடியும்.
- அதிக நெகிழ்வுத்தன்மை காணப்படும். இதனால் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கற்றுக் கொள்ள முடியும்.
- அதிக வளங்களை வேறுபட்ட முறைகளில் பெற முடியும்.
- மாணவர்களை பாடங்களில் அதிக ஈடுபாட்டுடன் இணைக்க முடியும்.

  இதனுடன் இணைந்த வகையில் பின்வரும் கற்றல் கற்பித்தல் மாதிரிகள் எடுத்துக்காட்டாக காணப்படுகின்றது.
- Vark கற்றல் மாதிரியின் அடிப்படையில் கற்பித் தல் செயற்பாடு நடைபெறல் வேண்டும்.
  1. Visual-பார்த்தல்
  2. Auditory-கேட்டல்
  3. Reading-படித்தல்
  4. kinesthetic-செயற்பாட்டுக் கற்றல்
- Immersive Learning ஆழ்ந்த கற்றல்-அனுபவ பூர்வமாக உண்மையான உலக சூழ்நிலைக்கேற்ப பொருட்களை உருவகப்படுத்தி, செயற்பாடுகளில் பங்கேற்று கற்றலாகும்.
- AI-Artificial Inteligence-செயற்கை நுண் ணறிவு- மனிதர்களைப் போலவே சிந்திக் கும்,கற்கும்,முடிவெடுக்கும் திறன் கொண்ட இயந்திரங்கள்.

கணினி நிரல்களாகும்.கல்வியில் AI-Artificial Inteligence-செயற்கை நுண்ணறிவு முக்கியத் துவம் வாய்ந்தது. தனியாள் கற்றல் அனுபவத்தை ஏற்படுத்தவும், நிர்வாக சுமையை குறைக்கவும், மதிப்பீட்டு செயன்முறையை மேம்படுத்தவும், கற் பித்தல் முறைகளில் மாற்றங்களை கொண்டு வரவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்தவும் உதவுகின்றது.

பல்வேறு வகையான யுஐ கருவிகளும், முறைகளும் காணப்படுகின்றன.

1. ChatGPT and Deepseek
2. Perplexity AI
3. Claude AI
4. Stor
5. Chemistry lab
6. physics Tool Box
7. Google Classroom
8. magic School AI
9. Suno
10. Gamma
11. Copilot
12. Ideogram
13. Canva

இவை பாடக்குறிப்புகள், ஆராய்ச்சி செயற் பாடுகள்.

தரவுகள் சேகரித்தல், வரைபடங்களைப் பெறல், விஞ்ஞான உள்ளடக்கங்களை மாணவரின் திறனடிப்படையில் வெளிப்படுத்தல், விஞ்ஞான செயன்முறைகளை மேற்கொள்ளல் என்பவற் றுக்கு உதவுகின்றது.

எனவே வழமையான கற்பித்தல் பாணி யிலிருந்து வேறுபட்டு நவீன உலகுக்கு ஏற்ற கல்விச் சிந்தனைகளை நவீன கற்றல் - கற்பித்தல் முறையினூடாக வழங்குவோம்.

எவ்வாறு இருந்த போதிலும் எமது பாடசாலைக் கட்டமைப்பினுள் கலப்புமுறைக்கற்றலில் பின்வரும் சவால்களும் காணப்படுகின்றன.

- இணைய வசதிகள் போதியளவு கிடைப் பதில்லை.
- பாடசாலைகளில் தேவைக்கேற்ப தொழிநுட்ப சாதனங்கள் இன்மை.
- பாடசாலைகளில் தொழிநுட்ப சாதனங்களின் பராமரிப்பு, திருத்த வேலைகள் மேற்கொள் ளப்படாமை.
- பொதுவாக தொழிநுட்ப சாதனங்களை ஆசி ரியர்கள் கையாழ்வதில் தயக்கம் காட்டுதல்.
- சமூக ,பொருளாதார சமத்துவமின்மை.
- டிஜிற்றல் திறன்கள் தொடர்பான பயிற்சி யின்மை.
- கருவிகளை கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப மூலதனம் அதிகம்.
- மாணவர்கள் தவறான நடத்தைக்கு செல்வ தற்கான வாய்ப்புண்டு.
- கருவிகளைக் கொண்டு உளம் சார்ந்த கணிப்பீட்டு விடயங்களை அறிவது கடினம்.

இவ்வாறான பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மாணவர்களின் திறன்களை விருத்தி செய்வதன் ஊடாக இலங்கையின் கல்வி வளர்ச்சியைமேம் படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, சமூக பண்பாட்டு வளர்ச்சி,தொழில் வாய்ப்பு, விஞ்ஞான தொழிநுட்ப வளர்சியை ஏற்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

**ரி.எல்.றைசுடீன்,**
**சம்மாந்துறை.**



# ஜேர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு லண்டன் சென்ற ஸ்டாலினுக்கு வரவேற்பு

ஜேர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு பிரித்தானிய தலைநகர் லண்டன் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, அங்குள்ள தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்துள்ளனர்.

தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஒரு வார பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜேர்மனி, பிரித்தானியா சென்றுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி முதல்வர் ஜேர்மனி புறப்பட்டுச் சென்றார். அவருடன் மனைவி துர்கா ஸ்டாலின் மற்றும் அதிகாரிகள் சென்றனர். ஜேர்மனியில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அங்குள்ள தூதரக அதிகாரிகள், தமிழர் குடும்பத்தினர் முதல்வரை வரவேற்றனர். தொடர்ந்து, தமிழகத்தில் முதலீடு செய்யுமாறு அங்குள்ள தமிழர்களுக்கு முதல்வர் அழைப்பு விடுத்தார்.

மேலும், 'டி.என் ரைசிங் ஜேர்மனி' என்ற பெயரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார். இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் 7,020 கோடி இந்திய ரூபா மதிப்பில் 26 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து, கடந்த 2 ஆம் திகதி ஜேர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு பிரித்தானியா சென்றார். லண்டன் விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, முதல்வர் ஸ்டாலின் பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இதற்கிடையில் ஜேர்மனி பயணம் மற்றும் பிரித்தானியா சென்றடைந்ததுமை குறித்து அவர் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவுகளில்.

'தமிழகத்தின் வளர்ச்சிப் பயணத்துக்கு ஐரோப்பிய பயணம் துணை நிற்கும். தமிழ் உறவுகள் அளித்த அன்பும், ஜேர்மனியில் ஈர்த்த முதலீடுகளும் கொடுத்துள்ள ஊக்கத்துடன் பிரித்தானியா வந்தடைந்திருக்கிறேன். இந்தப் பயண அனுபவங்களை உடன் பிறப்புகளுடன் பகிர்கிறேன்.

பிரித்தானியாவில் கால் பதித்தேன். தொலைதூரக் கரைகளை கடந்து சென்றும், வீட்டில் இருப்பது போன்ற உணர்வை அளித்தது எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு. அங்குள்ளவர்களால் அன்புடனும், பாசத்துடனும் அரவணைக்கப்பட்டேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்காவிடின் தமிழ்நாடு இந்தியாவிலிருந்து பிரிவடையும்

## சீமான் கடும் எச்சரிக்கை



கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்காவிடின் இந்தியாவிலிருந்து தமிழ்நாடு பிரியும் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக தேர்தல் களம் சூடாகியுள்ள நிலையில், கச்சதீவு விவகாரமும் பேசுபொருளாகியுள்ளது.

இதுகுறித்து பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய சீமான்,

"கச்சதீவு தமிழகத்தின் சொத்து. அது தமிழர்களுக்குச் சொந்தமானது. இந்தியா எப்படி கொடுக்க முடியும். இதனை இலங்கைக்கு கொடுக்கும் போது அதனை இந்திய நாடாளு மன்றில் எதிர்த்த ஒரே நபர் மூக்கையா தேவராகும். தமிழன தலைவர் புகழ்ந்துகொண்ட கலைஞர் என்ன செய்தார். கச்சதீவு கொடுக்கப்பட முன்னர் அதுகுறித்து அவருக்கு விளக்கமளிக்கப்பட்டதாக செய்திகள் உள்ளன.

இந்தியமும் திராவிடமும் தமிழனத்துக்கும் தமிழத் தேசியத்துக்கும் எப்போதும் எதிரான என்பதை இதன் ஊடாக புரிந்துகொள்ள முடியும்.

நாம் தமிழர் கட்சியின் ஆட்சி அமைந்தால் உறுதியாக கச்சதீவு மீட்கப்படும். அதற்கான தீர்மானம் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டு நெய்தல் படை அமைக்கப்பட்டு மீனவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

கச்சதீவை இந்தியா மீட்காவிடின் தமிழ்நாடு பிரியும். சிங்களவர்கள் நண்பர்கள் என்றால் நாம் யார் எனக் கேள்வியெழுப்புகிறோம். அவர்கள்தான் முக்கியம் என்றால், எம்மை பிரித்து விடுங்கள் எனக் கோருவோம். இந்திய விடுதலைக்காக போராடியது தமிழர்கள். எம்மைவிட அவர்கள்தான் முக்கியம் என்றால், அவர்களுடன் இந்தியா நட்பு பாராட்டிக்கொள்ளட்டும்." என்று தெரிவித்துள்ளார்.



# விசா காலம் முடிந்த வெளிநாட்டு மாணவர்கள் பிரித்தானியாவிலிருந்து வெளியேற்றப்படுவர்

விசா காலம் முடிந்த பிறகும் தங்கியிருக்கும் மாணவர்களை வெளியேற்றவுள்ளதாக பிரித்தானியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

விசா காலாவதியான பின் புகலிடம் கோரும் சர்வதேச மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் பிரித்தானியா அறிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் 15,000 மாணவர்கள் தங்கள் விசாக்கள் காலாவதியாகும் போது தஞ்சம் கோருகின்றனர் என பிரித்தானிய உள்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவில் தங்குவதற்கு சட்டபூர்வ உரிமை இல்லையென்றால், உரிய நபர்கள் வெளியேற வேண்டும், அவ்வாறு வெளியேறவில்லை என்றால் குறித்த தரப்பினர் வெளியேற்றப்படுவார்கள் என பிரித்தானிய உள்துறை அமைச்சர் எச்சரித்துள்ளார்.

புகலிடம் கோரும் மாணவர்களில் முதலிடத்தில் பாகிஸ்தானியர்கள் உள்ளனர் என கூறப்படுகிறது.



# இந்தியாவில் இலங்கை அகதிகளுக்கு தண்டனை விதிகளிலிருந்து விலக்கு

2025 ஜனவரி 9 ஆம் திகதிக்கு முன்னர் இந்தியாவுக்குச் சென்ற இலங்கை தமிழ் அகதிகளுக்கு மத்திய அரசு தண்டனை விதிகளிலிருந்து விலக்கு அளிக்கவுள்ளதாக முன்னணி இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கைத் தமிழ் அகதிகள் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, பயண ஆவணங்கள் அல்லது விசா இல்லாமல் இருப்பது கண்டறியப்பட்டால் அவர்களுக்கும் தண்டனை நடவடிக்கையிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தாமாக முன்வந்து இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கை அகதிகளுக்கு விசா கட்டணங்கள் மற்றும் தங்கியிருக்கும் காலத்தை விட அதிக காலம் தங்கியிருந்ததற்கான அபராதத்தைத் தள்ளுபடி செய்யவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒப்பந்தத்திற்கு உடன்படவில்லையென்றால் உக்ரைனுடன் தொடர்ந்து போராடத் தயார்

## புடின் எச்சரிக்கை



யுக்ரைன் ஒரு ஒப்பந்தத்திற்கு உடன்படவில்லையென்றால், ரஷ்யா தமது அனைத்து நோக்கங்களையும் அடையும் வகையில் போராடத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தும் உலக ஒழுங்கிற்கும் சவாலாகக் கருதப்படும்.

சீனாவில் நடைபெற்ற பாரிய இராணுவ அணிவகுப்பில் கலந்து கொண்டதன் பின்னர் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இந்நிலையில், உக்ரைனின் ஜனாதிபதி செலென்ஸ்கியை சந்திப்பதற்கான சாத்தியத்தை தாம் ஒருபோதும் நிராகரிக்கவில்லை.

எனினும், அதில் ஏதேனும் அர்த்தமுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் குறிப்பிட்டுள்ளார்.

ஜெலன்ஸ்கி எப்போதும் மொஸ்கோவிற்கு வந்து தம்மை சந்திக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உக்ரைனின் போர் தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் இருந்து இதுவரை தமக்கு எந்தச் செய்தியும் வரவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அத்துடன், அவர் இன்று உக்ரைனிய ஜனாதிபதியுடன் தொலைபேசி கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளார் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.



# வான் பாதுகாப்பு கவச அமைப்புகளை இந்தியாவுக்கு வழங்குகின்றது ரஷ்யா

இந்தியாவுக்கு கூடுதலாக எஸ். 400 வான் பாதுகாப்பு கவச அமைப்புகளை வழங்க, பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது

அதிநவீன தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்பட்ட இந்த கவச அமைப்பு, உலகின் முதன்மையான வான் பாதுகாப்பு ஆயுதமாக கருதப்படுகிறது.

இந்த கவச அமைப்புக்கு இந்தியா ஏற்கனவே சுதர்சன சக்கரம் என்று பெயர் சூட்டியுள்ளது.

அண்மையில், பஹல்காம் சம்பவத்தைத் தொடர்ந்து, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தீவிரவாத நிலைகள் மீது இந்தியா தாக்குதல்களை நடத்தியது.

எனினும் இதனை எதிர்த்து பாகிஸ்தான் நடத்திய ஏவுகணை தாக்குதல், ட்ரோன் தாக்குதல்களை எஸ். 400 வான் பாதுகாப்பு கவச அமைப்புகளே வெற்றிகரமாக முறியடித்தன.

இந்த எஸ் 400 வான் பாதுகாப்பு அமைப்புகள், வான்வெளியில் 600 கிலோ மீற்றர் தொலைவில் இருந்து வரும் எதிரி ஏவுகணைகளை, 400 கிலோமீற்றர் வரை வானில் இடைமறித்து தாக்கும் திறன் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.



கனடா முரசு
வியாழக்கிழமை | 04/09/2025

## கனடிய எல்லையில் கொக்கைன் பறிமுதல்



02



# 82,000 வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு சிக்கலை உருவாக்கும் பொய்லிவ்ரே திட்டம்

**தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தை உடனடியாக நிறுத்தவேண்டும் என கனடா எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.**

**கனடா தனது தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என கனடா எதிர்க்கட்சித் தலைவரான பியர் பொய்லிவ்ரே வலியுறுத்தியுள்ளார்.**

தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தால் கனேடிய பணியாளர்கள் மற்றும் இளைஞர்களின் வேலை வாய்ப்புகள் பறிக்கப்படுவதாகவும், ஊதியங்கள் மீது அது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் குற்றச்சாட்டுகள் முன்வைத்துள்ளார்.

இந்த ஆண்டில் கனடா 82,000 வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு பணி வழங்கத் திட்டமிட்டுள்ள நிலையில், கனடா எதிர்க்கட்சித் தலைவரின் திட்டம் அவர்களுக்கு சிக்கலை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது.

தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று பியர் பொய்லிவ்ரே வலியுறுத்தினாலும், பணியாளர்கள் கிடைப்பதற்கு அரிதான பணிகளான விவசாயம் போன்ற துறைகளில் வெளிநாட்டுப் பணியாளர்களை அனுமதிக்கலாம் என்றும், வேலைவாய்ப்பு உள்ளதா இல்லையா என்பதன் அடிப்படையில் பணி அனுமதிகள் வழங்குவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மதுபானத்தை பொதுவெளியில் கீழே ஊற்றி எதிர்ப்பை வெளியிட்ட ஒன்றாரியோ முதல்வர்



கனடாவின் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் மது பான உற்பத்தி நிறுவனமொன்றுக்கு நூதன முறையில் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

மேற்படி மதுபான உற்பத்தி நிறுவனத்தின் மதுபான போத்தல் ஒன்றில் இருந்த மதுபானத்தை பொதுமக்கள் முன்னிலையில் கீழே ஊற்றி உள்ளார்.

பிறவுன் றோயல் விஷ்கி என்ற நிறுவனத்தின் மதுபான போத்தலை அவர் இவ் இவ்வாறு ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் கீழே ஊற்றி தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

03




# ராணி என தன்னை கூறிக்கொண்ட பெண் உள்ளிட்ட 16 பேர் கைது

கனடாவின் ராணி என தன்னைத் தானே அழைத்துக் கொண்ட பெண் உள்ளிட்ட 16 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சஸ்காட்சுவான் மாகாணத்தில் உள்ள ரிச்சமவுண்ட் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது தன்னை கனடாவின் ராணி என அழைத்துக் கொண்ட ரோமானா டிடுலோ உள்பட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டிடுலோ தலைமையிலான குற்றக் குழுவினர், 2023 செப்டம்பர் மாதம் முதல் அந்த கிராமத்தில் உள்ள பழைய பள்ளிக்கூடக் கட்டடத்தில் வசித்து வந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஓகஸ்ட் 25 ஆம் திகதி அங்கு ஒருவர் துப்பாக்கியுடன் இருப்பதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து, சுமார் 30 இற்கும் மேற்பட்ட பொலிஸ் வாகனங்கள் மற்றும் இரண்டு சிறப்பு தாக்குதல் வாகனங்கள் என்பனவற்றுடன் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

ரோமானா டிடுலோ, கோவிட் போராட்டங்களின் போது சமூக ஊடகங்களில் முன்னிலையாகி, தன்னை கனடாவின் ராணி என அறிவித்து, தீவிர சதி கோட்பாடுகளைப் பரப்பியவர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண் மற்றும் அவரது குழுவினர், காம்சாக் நகரிலிருந்து வெளியேற்றப்பட்டு ரிச்சமவுண்டில் குடியேறினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெண் உள்ளிட்ட குழுவினர் கிராம மக்களை துன்புறுத்தியதாகவும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# கனடிய எல்லையில் கொக்கைன் பறிமுதல்




கனடாவின் ஒன்டாரியோ மாகாணம் போர்ட் எட்வர்ட் - ப்ளூ வாட்டர் பாலம் எல்லைப் பகுதியில், கனடா எல்லை சேவை முகமை அதிகாரிகள் மொத்தம் 349 கிலோ கொக்கைன் போதைப் பொருளை பறிமுதல் செய்துள்ளனர்.

இதன் மதிப்பு 43.7 மில்லியன் டொலர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பறிமுதல் இரண்டு தனித்தனியான சம்பவங்களில் நடந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் 13 இல் அமெரிக்காவிலிருந்து வந்த வணிக லொறி ஒன்றை இரண்டாம் கட்ட சோதனைக்கு அனுப்பியபோது, அதிலிருந்த 6 பெட்டிகளில் 150 கிலோ கொக்கைன் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் பிராம்ப்டன் பகுதியைச் சேர்ந்த 28 வயது நபர் கனடிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

மேலும் ஓகஸ்ட் 14 மறுநாள் அமெரிக்காவிலிருந்து வந்த டிரெய்லர் லாரி ஒன்றை சோதனையிட்டபோது, 199 கிலோ கொக்கைன் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த சம்பவத்தின் போது எடோபிகோ பகுதியைச் சேர்ந்த 38 வயது நபர் கைது செய்யப்பட்டார். இருவருக்கும் கொக்கைன் இறக்குமதி செய்தது மற்றும் கொக்கைன் கடத்தல் நோக்கத்திற்காக வைத்திருந்தமை என்ற குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கனடியர்களை போதைப்பொருள் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்க எங்கள் உறுதியான முயற்சிகள் தொடரும் என கனடிய பொலிஸ் தெரிவித்துள்ளது.



# கனடாவில் தீ விபத்தில் 11 வயது சிறுமி உயிரிழப்பு

கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் உள்ள ரிச்மண்ட் ஹில்லில் ஒரு வீட்டில் ஏற்பட்ட தீவிபத்தில் 11 வயது சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

தீவிபத்தில் கடுமையாக காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் கொலை என்ற அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி அதிகாலை 3 மணியளிவில் ஸ்கைவுட் டிரைவ் பகுதியில் உள்ள வீட்டில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த வீட்டினுள் சிக்கியிருந்த நால்வரும், வெளியே கிடந்த ஒருவரும் மீட்கப்பட்டனர். அனைவரும் மிகக் கடுமையான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சிகிச்சை பெற்று வந்த 11 வயது சிறுமி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



## மதுபானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மதுபான உற்பத்தியை நிறுவனம் ஒன்றாரியோ மாகாணத்தில் காணப்பட்ட உற்பத்தி நிலையத்தை அமெரிக்காவிற்கு மாற்ற தீர்மானித்துள்ளது.

இந்த உற்பத்தி சாலை மூடப்படுவதனால் மாகாணத்தில் பெருமளவு தொழில் வாய்ப்புகள் இழக்கப்படும் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக முதல்வர் அந்த நிறுவனத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் போத்தலின் இருந்த மதுபானத்தை கீழே ஊற்றி எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

கனடாவில் மதுபானம் உற்பத்தி செய்யப்படும் நிறுவனங்களுக்கு ஆதரவினை வெளிப்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.